உ

ஸ்ரீராமஜயம்

சீர்காழி தாலூக்கா வடரெங்கம்

கொள்ளிட வெள்ளக்

# -:கோலாகலச்சிந்து:-

இஃது

சிதம்பரம் தாலூக்கா வெள்ளூர் காலஞ்சென்ற
முத்துவேல் படையாக்ஷியார் அவர்கள் தம்பி மகா-ள-ள-ஸ்ரீ

சோக்கலிங்க படையாக்ஷியார் குமாரனும்

வெள்ளூர் வாலிப க்ஷத்திரிய சங்க மாணாக்கனுமாகிய
ரெங்கராஜா

இயற்றியதை

ஷையூர் போர்டு ஸ்கூல் 1st அஸிஸ்டெண்ட் மாஸ்டர்
மகா-ள-ள-ஸ்ரீ R. சாமிநாத படையாக்ஷியார் அவர்கள்

விருப்பத்தின்படி

ஷையூர் T. A. கோவிந்தசாமி படையாக்ஷியாரால்

சிதம்பரம் ஸ்ரீ பார்வதி விலாஸ பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.
1924.

இதன் விலை] [அணா 1

3 - NOV 1924

உ

# வெள்ளச்சிந்து.

கணபதி காப்பு.

சேலம் ஈரோடுமுதல் சேர்ந்துவந்த ஜலவிபரம்
சாலமாய் ஜலம்பெருகி தஞ்சாவூர் ஜில்லாவில்
கோலமாய் கொள்ளிடத்தால் கொடுமைகள் நேர்ந்துவிட்ட
செய்தியை யானறிந்து பயந்துநான் பாடுதற்கு
செல்வனடி வணங்கினேனே

—சிந்து—

பல்லவி

காவேரி வெள்ளம் வந்த காலத்தைப்பாராய்
கொள்ளிட நதிபெருக்கின் கோலத்தைக்கேளாய்

அனுபல்லவி

கொள்ளிடம் அணை இரண்டும் கொள்ளாமல் ஜலம்வர
கொந்தளித்திடவே கோலாகலமாய் ஜனங்கள் மிரண்டோடவே

சரணம்

ஆயிரத்து தொளாயிரத்து    இருபத்துநாலினில்
அடுத்த ஜூலைமாதம்    ஒன்பதில் புதன்வாரம்
அதிகமாய் நாலடி    ஜலமிக பெருகிட
அதனால் உடைப்பது    தஞ்சாவூர் ஜில்லாவில்
பாப்பாக்குடி அணை உடைத்தே
பலவயல்களும் ஊர்களும் சேதமாச்சே

ஐந்துக்கும் இருபதுக்கும்    அகலம் எடுக்கலாச்சு
எடுத்தது ஆழமே    எட்டுக்கும் நாலுக்கும்
அதினால் கெட்டுப்போன    தைநூறு வேலியாகும்
ஆனதினால் ஜனங்கள்    அலறி அழுகலாச்சு
[illegible]போச்சுது ஊரு இருக்கயிடம் தெரியாமல்
[illegible]ச்சுது மண்மேடு

அடுத்த ருயராம்பேட்டை எடுத்தஉடைப்பு ஒன்று
அதைப் போலவேயெடுத்தது சித்தமல்லி உடைப்பு
அதுவும் அவ்வளவு அகல உடைப்புதான்
அகர எலத்தூரில் அகண்டமாய் பிடிங்கிற்று

இதுபெரும் உடைப்பு இந்த
ஜில்லாவைகெடுத்ததுகா வேரிதலைப்பு

வடரெங்கம் செய்தியை வண்மையாய்ச்சொல்கிறேன்
நடந்த பத்தாந்தேதி ஐந்தடி ஜலம்கூட
கடந்து அணையிரண்டும் இரண்டு விழுந்தது
படர்ந்த மரங்களும் மிதந்து போகலாச்சு

ரோட்டுகள் போச்சே இருந்த
இடந் தெரியாமல் மடுவுகள் ஆச்சே

மாருதிகோவிலும் மாயமாய் போச்சுது
மறையவர்கள் வீடுகள் மடுவாய் யிருக்கலாச்சு
மேளக்காரர் வீடெல்லாம் மேன்கூரை விழலாச்சு
மிகுந்த கூரையெல்லாம் மறைந்துவிடலாச்சு

இதுவென்னக் காலம் இரக்தாட்சி
வருஷத்தில் ஏற்பட்ட கோலம்

கட்டுமரத்தினால் கரைசேர பார்த்தார்கள்
கிட்டி வந்தவர்களை கெட்டியே தள்ளலாச்சு
கட்டிய வேஷ்டியோடு கரைசேரல் அரிதாச்சு
கணக்கில்லா சாமான்கள் ஜலத்தில் போகலாச்சு

வீடுகள் இடிந்து மடுவில்
அழுந்தி ஓடுதே பாந்து

குருக்கள் தெருவிலே இருந்த ஜனமெல்லாம்
குய்யோ முறையோவென்று ஓங்கி அழுகலாச்சு
நாலுபக்கம் பார்த்தாலும் பாழும் மடுவாய்போச்சு
ராமா ராமாவென்று நாமம் ஓதலாச்சு

எங்கே பார்த்தாலும் ஜலமே மனம்
ஏங்கியே ஓடினார்கள் ஜனமே

வடரெங்கம் என்னுமூரு    வழிதெரியாமல் போச்சு
வாய்க்கால் வயல்களெல்லாம்    மண்மேடாய் இருக்கலாச்சு
வாரசாகுபடியெல்லாம்    சாரமில்லாமல் போச்சு
வரண்ட பக்கமெல்லாம்    பிரண்ட வெள்ளமாச்சு

ஆற்றிலேபாதி ஜலமிங்கே
பிரிந்துபோகுதே சீர்காழி

ஐம்பது வீடுகள்    மடுவில் அழுந்திப்போச்சு
அழகான தெருவெல்லாம்    அடியோடு போகலாச்சு
பக்கத்தில் அரங்க    நாதர் கோவிலாச்சு
பட படவென்று கீழே    இடிந்து விழுந்துபோச்சு

தெருவிலே தேரு
தள்ளிப்போகுதே ஆறு

மதில்களெல்லாம் இடிந்து    மடுவில் விழுந்துபோச்சு
மடப்பள்ளி யழிந்துமே    ஜலத்தில் கிடக்கலாச்சு
சபாமண்டபங்களும்    சரிந்து விழுந்துபோச்சு
சார்ந்த கெருடன்கோவில்    தனியே விழலாச்சு

அர்த்தமண்டபம் போச்சே
அதிலிருந்தசாமான் அனியாயமாச்சே

அம்மன்கோவில்தானும்    அடியோடு போச்சுது
அடுத்த ராமர்கோவில்    அதுவும் விழுந்துபோச்சு
ரெங்கநாதர் கோவிலை    நெருக்கி யிடிக்கலாச்சு
ரூமசாமியைத் தூக்கி    ரோட்டில் போடலாச்சு

கேளிக்கைமண்டபம் போச்சே
வாகன கொட்டாயும் தான்விழலாச்சே

அன்னவாகனமும்    ஆற்றில் மிதந்தது
அனுமார் வாகனமும்    அதன் பின்னால்போனது
ஆனைவாகனத்தை    அடித்துக் கொண்டோடுது
அவைகள் மிதந்துமே    ஆற்றில் போகும்போது

குதித்தார்கள் ஜனங்கள்
அனைத்தையும் சேர்த்தாரே கரையில்

அனைவரும் கூடியே ஆலயத்தில் புகுந்து
அடிபீடத்தை இளப்பி சாமியை தூக்கியே
மூலவிக்கிரகமான ரெங்கநாதர் தன்னை
முப்பது ஜனம் தூக்கி ரோட்டில் வைக்கலாச்சு
காலபூஜை போச்சே கண்டாமணி
தண்டித்து விழலாச்சே

ஆறுகாலம் பூஜை நடந்த கோவிலும்போச்சு
ஆதியில் முன்னோர்கள் கட்டிய திடியலாச்சு
அனேக ஜனங்கள் அதில் பிழைத்ததும் கெட்டுப்போச்சு
ஆதி நாராயணாவென்று அலறி அழகலாச்சு
சப்பரம்போச்சே ஜலத்தில்
மிதந்து அழுந்தவுமாச்சே

அழகான கோபுரம் தனித்து இருக்கலாச்சு
அதற்கும் கீழேஜலம் இருப தடியாய்ப்போச்சு
இரங்க விமானமொன்று ஊரைக்காட்டலாச்சு
இரண்டுபக்கமும் ஜலம் இடித்துக்கொட்டலாச்சு
சிகரம் எடுக்கவுமாச்சே அதை
சுற்றிலும் ஆழி போலாச்சே

மோதும் ஜலத்தினால் முழுரோட்டும் இடியலாச்சு
முன்னே இருந்தரோட்டு ஆழமடுவாய்ப் போச்சு
புதிய ரோட்டுப்போட துவக்கம் பண்ணலாச்சு
பிழைக்கும் ஜனங்களுக்கு அதுவே வழியாச்சு
இதுஎன்னகாலம் கலிகாலக்
கொடுமைபால் நடந்திட்டகோலம்

சென்யநல்லூர் பூங்குடி மாதலூரும் போச்சு
மாத்தூர் ஓலையாம்புத்தூர் மிதக்கவே ஆச்சு
பட்டணவூர் புத்தூரும் பஞ்சாய் பறக்கலாச்சு
பதமான நடவெல்லாம் ஜலத்தில் போகலாச்சு
குருவை விதைகளும்போச்சே அங்க
குடிகளுக்குவெகு நஷ்டமாச்சே

எலத்தூரிலேயிருந்து எடுத்த உடைப்பாலே
அடுத்தவூர் ஜனம் அலறி ஓடலாச்சு
அந்தந்த கிராமத்து ஜனமும் நடுங்கலாச்சு
பட்டிமேரிட்டு ஜனம் மேட்டில் இருக்கலாச்சு
வாடி ஜனமெல்லாம் ஓடியே
தேடி மரங்களின்மேலேரியே

சிலோன் மெயிலும் ஷெட்டிலும் நின்றுபோச்சு
சீக்கிரம் ரயில்ரோட்டு முழுதுமே பழுதாச்சு
வல்லம்படுகைபோக வழியே யில்லாமல்போச்சு
வயல்களும் ஊர்களும் கடல்போல் இருக்கலாச்சு
கொள்ளிட ரோட்டுகள் போச்சே
கும்பினி பணத்துக்கு செலவுகளாச்சே

உடப்பில்போகும் ஜலம் சமுத்திரத்தை அடுத்தே
உயர்ந்த திருமுல்லைவாசல் பள்ளிவாசலும் போச்சே
சீர்காழிதனில் இடம் தெரியாமலே அடித்தே
சீக்கிரம் கலைக்டரால் போட்டு வரவழைத்தே
படகுமேல் எற்றி ஜனங்களுக்குண்டான
பயங்களை மாற்றி

அனேக புண்ணியவான்கள் அரிசிபடி தந்து
அதற்கான செலவுக்கு அரையணா ஈந்துமே
அலுத்த ஜனங்களை ஆகரித்தழைத்துமே
அழகான செட்டிநாட்டாரும் இளம்பியே நல்ல
துணிகளைவாங்கியே தந்தார் ஜனங்களின்
துக்கத்தை மாற்றியே ஒழித்தார்

வெள்ளத்தினால் சேதம் இப்படியாச்சுது
வெள்ளெருது தோணியோ வழக்கம்போல் வருவது
அபாயமான தினமேல அடிக்கடி தள்ளினார்
அழுகிற ஜனமெல்லாம் படகுமேல் எற்றினார்
வெள்ளெருது படகை கண்டவுடன்
களித்தாரே ஜனங்கள்

சிதம்பரம் தாலூக்கா வெள்ளேரிலிருந்து
தாலூக்காபோர்டு மெம்பர் த. ஆதிமூலசேதுராயர்
முக்கியமாய் உள்ள பூங்குடி முதலியார்
தங்கவேல் முதலியார் கோவிந்தசாமி படையாச்சியும்
இவர்கள் நன்முயற்சியால்
இரங்கநாதரை எடுத்துமே வைத்தனர்

இப்படி யிருக்குது சீர்காழி தாலூக்கா
இதனால் ஜனங்களுக்கு சாப்பாட்டுக்கு லாக்கா
சிதம்பரம் தாலூக்கா வெள்ளேரென்றாக்கா
சீக்கிரம் துஷ்டர்கள் என்பார்கள் மேன்போக்கா
சாதுக்களாச்சே அவர்கள் மேல்பழி
சொல்வதெல்லாம் வீண் பேச்சே

சிதம்பரம் தாலூக்கா வெள்ளேரிலேயிருந்து
சீக்கிரம் படகுமேல் ஏறிநான் பார்த்ததில்
துரிதமாய் வெள்ளேரு படையாசர் தெரு
ரெங்கராஜா நானும் நினைத்துப்பாடினதில்
குற்றத்தை பொறுப்பீர் குணமாக
கொஞ்சம் பின்னால்சொல்வதை கேட்பீர்

## தெம்மாங்கு

ரக்தாட்சி வருஷமதின் ஆனி யிருபத் தாறுந் தேதி
பாப்பாக்குடி உடைப்பெடுக்க பரந்ததாமே ஜனங்களெல்லாம்

சிப்பலூர் உடைப்பு ஒன்று சீக்கிரம் எடுத்ததாலே
சீர்காழி தாலுக்காவை இவ்போல ஆக்கினதே

பட்டவர்த்தி புலவனூரு பாங்கான கடுவங்குடி
திட்டமுடன் இன்னம் பல ஊர்களுமே கெட்டுப்போச்சு

அனேக கிராமங்களும் அழுந்தினது ஜலந்தனிலே
ஐந்தாரு வேலி நிலம் ஆனதாமே மண்மேடாய்

இப்படி போனதினால் ஏழைகள் படுங் கஷ்டத்தை
இன்னவிதமென்று சொல்ல என்னாவும் கூசுகிதே

பணக்காரர் ஏழைகட்கு படியரிசி அரையணுவும்
ஒருவாரம் கஞ்சி காச்சி ஊற்றினுர்கள் பறையருக்கே
இந்தசேதி கேட்டவுடன் நாட்டுக்கோட்டை செட்டிகளும்
எடுத்துத்தந்தார் சிட்டித்துணி ஏழை பா ஜாதியர்க்கே
உடைப்பாலே கெட்டுப்போன ஒவ்வொரு கிராமத்திற்கும்
ஐம்பதாவதாக அளித்தாராம் தர்மத்திற்கு
திருநாராயணபிள்ளை யவர் ஸ்ரீமான் சீர்காழி ஸ்தலத்தில்
தினமும் தர்மம் செய்யும் கனவானவர் குடிகளுக்கே
திருச்சினுப்பள்ளியிலே பிரிந்துபோன காவேரி
தஞ்சை ஜில்லா தனிலே தனியேபோக லாகாதென்று
கொள்ளிடத்திலே சேர்ந்து கொண்டதனுல் காவேரியில்
அள்ளி அருந்தகூட அணுவளவு ஜலமேயில்லை
உலகம் அதர்மத்தினுல் உடனே கெடுத்தது காண்
கெட்டவுடன் கடவுளேயே கிருபை செய்ய வேண்டுகுது
ஆனதால் புவிமேலே அதர்மத்தை செய்யாமலே
சீருடனே தர்ம குணம் செலுத்துவோமே யாவருமே (தன்)

---

சேந்தமிழ் உலகினில் என்ற மெட்டு.

---

ஈரோடு கருவூர்முதல் ஏராள மானவெள்ளம்
எங்கும் பிரண்டு வந்ததால் திருச்சினுப்பள்ளி அணை
தங்காமல் உடைத்தெரிந்ததே

முடுகு

தஞ்சாவூர் ஜில்லாவில் வந்திட்ட காவேரி
தலைப்பை அதிகமாய் துத்ததினுலே
கொள்ளிடத்திலே ஜலமே ரோட்டுகளெல்லாம்
கொள்ளாமல் உடைத்தெரிந்ததே
தஞ்சை ஜில்லா முழுதும் எங்குமே வெள்ளம் வந்து
பஞ்சாய் பாக்கலாச்சுதே—ஏழை ஜனங்கள்
விதைத்த விதைகள் போச்சுதே (ஈரோ)

முடுகு

2 இப்படி வெள்ளிடத்தால் ஏற்பட்ட கஷ்டத்தை
பணிந்து சிறுவன் யான் பயந்துமே சொல்கிறேன்
பாப்பாக்குடியின் உடைப்பு எடுத்ததாலே
வெள்ளிடத்தையே திருப்பி
பாதி ஜலத்தை யிங்கு கோராய் இழுத்ததினால்
தஞ்சாவூர் ஜில்லாவைப்போல—இந்தப்பக்கத்தில்
பஞ்சமும் வேறே யில்லையே

முடுகு

அதையடுத்த உடைப்பு சிப்பலூர் எடுத்திட
அகலேலே ரயில் பாதையை கெடுத்திட
வண்டிகள் நின்றுப்போச்சுதே இஞ்சின் டிரைவர்
தந்திபடிக்கலாச்சுதே
சீர்காழியிலிருந்து வல்லம்படுகைபோக
சீக்கிரம் ரயிலில்லையே அங்கங்கு வண்டி
தங்கி கிடக்கலாச்சுதே (ஏரோ)

முடுகு

3 எலத்தூரிலிருந்து எடுத்தஉடைப்பாலே
அங்கிருந்த சுப்பிரமண்யர் கோவிலைபிடித்தே
தெருவுகள் எல்லாம் போச்சுதே வெள்ளிடம்
ரோட்டு ஆழமடுவாய் ஆச்சுதே
அதினால் ஜனங்களெல்லாம் ஆடுமாடுகளை ஓட்டி
ரோட்டிலேசாலைகள் போட்டே—பதினெட்டாங் குடிவரையில்
பத்தியாய் குடியிருந்ததே

முடுகு

வடரெங்கம் ரெங்கநாதர் கோவிலை யிடித்தே
அக்ராகாரத்தை அடியோடு ஒழித்தே
மடுவாக ஆக்கினதாலே சாமியைத் தூக்கி
ரோட்டிலே வைத்தார் பலபேரே
ரெங்கநாதரே உன்னை நீதியாய் அரசர் கட்டிவைத்த யிடத்திலிருந்தாய்
ரக்தாட்சி ஆனி இருபத்தேழிலெழுந்தாய் (ஏரோ

4 அலைகடல் தனிலேவீற்றிருந்தவா
பக்தர்களுக்கே முக்தி தந்தவா

வடரெங்கத்திலமர்ந்தவா ஸ்ரீ ரெங்கநாதா
வகையான கொள்ளிடத்தாலே
வந்திட்ட மோசத்தால் சிந்தை கலங்கி நாங்கள்
வாடுகிறோம் ஏழைகளுமே
எங்களைக்காத்து ஆதரிப்பாய் ரெங்கநாதரே (ஈரோ)

## நொண்டிச்சிந்து

மைசூர் ராஜ்யத்திலே குடகு
நாட்டிலுள்ள மர்க்காராவின் பக்கமதில்
உற்பத்தியாவெரும் அரிய
அகண்டக்காவேரி யென்னும் நதிதானும்
திருச்சினாபள்ளிக்கு மேற்கே கொஞ்சம்
தூரத்திலேயிருந்தே பிரிகிறதே
அதனில் வரும் கிளைக்கு கொள்ளிடமென்று
பெயர்சொல்லலேவ முறையாச்சு
கொள்ளிடம் செய்கதியை முன்னம்
சொல்லியிருக்கிறேன் பார்த்துக்கொள்ளுங்கள்
இன்னம் ஓர் அதிசயத்தை நான்
யியம்புகிறேன் கொஞ்சம் கேட்பீர்கள்
கொள்ளிடம் வலக்கரையில் வடரெங்கம்
என்னுமோர் க்ஷேத்திரமுண்டு
அதில் ஒருமைல் உடைக்க ஊரெங்கும்
தங்கவிடமில்லாமல் ரெங்கம் போகவே
இடக்கரை தன்னிலுள்ள வெள்ளூர் என்னு
மொருகிராமத்தின் மிராசுதார்கள்
வடரெங்கம் செய்தி தன்னை கேட்டவுடன்
பார்த்திடவேணுமென்று ஆவல் கொண்டு
படகு குத்தகைக்காரர் இராமசாமி
சேதுராயரிடம் சென்று வடரெங்கம் செல்ல
படகு தேவை யென்றார் சொன்னவுடன்
அவருமே தோணிகொண்டு நிறுத்தினாரே
வந்தோர் எல்லாரையும் தோணிமேல்
ஏற்றிவந்து அக்கரையில் சேர்த்துவிட்டார்
அவர்களைக்கண்டவுடன் அந்தவூர்
ஜனங்களெல்லாம் வந்து முறையிட்டது
ஐயோ என்னசெய்வோம் நாங்கள்
ஆற்றிலேயே போய்விடுவோம் என்றுசொன்னார்
இந்த உரை கேட்டவுடன் வாருங்கள்
பயப்படவேண்டாம் நாங்கள் பாதுகார்க்கிறோம்
என்றுமே அவர்களைத்தான் தோணியில்

ஏற்றிக்கொண்டு வந்துமே கரைசேர்த்தார்
பின்னர் கோவிலேஜலண்டு தாங்கள்
கட்டிவைத்த நெல்லு எழுநூருகலம்
ஜலத்தினில் போகுதையா இதை
எடுத்துக்கரைதனிலே சேர்த்துவிட்டால்
வெகுமதியாகவேதான் உங்களுக்கு
நூருகலம் தருகிறேன் என்றுமே சொன்னர்
அந்தவிதமாகவேதான் அதற்காக
பாடுபட்டார் நாற்பதுபேர் விரைவுடனே
இறண்டுநாள் ராப்பகலாய் எல்லா நெல்லும்
எடுத்துக்கொட்டியே கரை சேர்த்தார்கள்
முன் சொன்ன சொல் தவராமல் அப்படியே
கொடுத்தார்கள் நூருகலம் நெல்லையுமேதான்
கொண்டுவந்து தங்களுக்குள் விதப்படி
கிரமமாய் பங்கிட்டு எடுத்துக்கொண்டார்
பார்த்தவர் மனமகிழ்ந்து இவர்களைப்போல்
தைரியமாய் ஜலத்தில் போவார் அருமைதானே
என்றுமே பேசிக்கொண்டு எல்லோரும்
நீடூழி வாழ்கவென்று ஸ்தோத்தரித்தார்
இவ்விதம் இராப்பகலாய் இரண்டுநாள்
இல்லாவிட்டால் ஜனங்கள் அழிந்துவிடும்
இத்துடன் நிறுத்திவிட்டேன் எந்தன்
குற்றங்குறைகளை பொருத்துக்கொள்வீர்
ஐயனே காலடுமை ரெங்கராஜா
பாடினேனே அங்குசென்று பார்த்தபடியே (தந்தின)

—கும்மி—

ரக்தாட்சி வருஷம் ஆனிமாதத்திலே
நடந்திட்ட வெள்ள சேதமதை
பக்தியாகவே ரெங்கராஜா நானும்
பாடிவருகிறேன் கேளுங்கடி

ஈரோடு பவானி சேலமுதற் கொண்டு
எங்குமே வெள்ளத்தால் நஷ்டமாச்சு
திருச்சிணப்பள்ளி கொள்ளிடம் அணைக்கட்டை
சிதரஉடைத்ததாம் பாருங்கடி

ஸ்ரீரெங்கம் கோவிலின்சுற்றுமதிலெல்லாம்
சரிந்து போனதாம் ஜலத்தாலே
ஏழுநாள் ஆலயம் போகமுடியாமல்
அர்ச்சகர் இருந்தாராம் கேளுங்கடி

லோயரணைக்கட்டிற்கு கீழ்புறமிருக்க
கடுதிட்டு நாயகம் ஊர்களெல்லாம்
இடிந்துவிட்டதால் ஜனங்களெல்லாமே
ஏரிகரை மேட்டிலே பாருங்கடி

தஞ்சாவூர் ஜில்லாவில் சீர்காழி தாலூக்கா
தவழும் கொள்ளிடம் இந்துடப்பாம்
சிந்தை கலங்கவே குடிகளுக்கே வெகு
சேதமாய் போனதாம் கேளுங்கடி

கனதனவானவர் முதலியாருமே
கஷ்ட நிவாரண பண்டியிருந்து
கணக்குப்படி தொகை தான் கொடுக்க
கண்டு களித்தார் ஜனங்கள் பாருங்கடி

சென்னையிலிருந்து ஐகோர்ட்டு வக்கீலும்
சீக்கிரம் நாலைந்து பேர்கூடி
வெள்ளத்தால் கெட்டிட்ட ஏழை ஜனங்கட்கு
வெகுதர்மம் செய்தாராம் கேளுங்கடி

லண்டன் சக்ரவர்த்தி தன் அதிகாரத்தால்
சென்னை மாகாணத்தின் கர்த்தரான
சுந்திரகவர்னரும் வடரெங்கத்திற்கு
வந்தாமே சென்றாராம் பாருங்கடி

கெங்கை புகுந்தாமே வீடு வாசலெல்லாம்
கீழேபுதைந்தாமே சாமான்களை
கொண்டுபோய்விட்டது சமுத்திரமென்
கும்மியடித்தாமே பாடுங்கடி

வெள்ளச்சிந்து முற்றிற்று

18

கூடிய சீக்கிரம் இதன் இரண்டாம்பாகம் வெளிவரும்.

ஸ்ரீ பார்வதி விலாஸ பிரஸ், 19. தெற்குசந்நிதி ரோட் சிதம்பரம்.